( A/L ZOOLOGY )
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்
திரு. K. சிவபாதம் B.Sc, (Hons)
ஆரம்பம்:
11-1-1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L வகுப்புகளுடன்
O/I 9, 5, 6, 7, 8ம் 1, 2, 3, 4ம் வகுப்புகளும்
ஆரம்பம்:
14-1-1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன வருடம் தை மீ 13 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஜ. அவ். பிறை 15 (26-01-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:-59

★ அதிர்ச்சி தரும் படுபயங்கரம்

# கிளிநொச்சி ரயில் நிலையத்தில் பயணிகள் 11 பேர் சுட்டுக்கொலை

## மோட்டோ ஷெல் தாக்கி மற்றும் 6 பேர் பலியாகினர்!!

### காயமடைந்தோர் எண்ணிக்கை 16

— அலுவலகச் செய்தியாளர்; வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஜன. 26

**யாழ்தேவி ரயிலில் பிரயாணம் செய்வதற்காகக் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் காத்துநின்ற பயணிகள் 11பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.**

**சிருடையில் வந்த ஐந்தாறு பேர் இந்த அதிர்ச்சி தரும் பயங்கரத்தைச் செய்துவிட்டு விரைந்து மறைந்தனர் என்று அறியப்படுகிறது.**

அதே நேரத்தில் இராணுவ—பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து வந்து விழுந்த மோட்டோ ஷெல் குண்டுகளுக்கு 6 பேர் பலியானார்கள்.

இரண்டு சம்பவங்களிலும் காயம் அடைந்தோர் எண்ணிக்கை 16என்று முந்தி வந்த செய்திகள் தெரிவித்தன.

இறந்தவர்கள், காயமுற்றோரின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம என அஞ்சப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

நேற்று பிற்பகல்சுமார் 2-30 மணியளவில் இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிற்குள் குண்டு ஒன்று விழுந்ததாம். அதன் விளைவாக 'சென்றிகள், இருவர் காயம் அடைந்தனர் எனத் தெரிகிறது.

அதன்பின் சில நிமிஷ நேரத்தில் ரயில் பாதை வழியே வந்த ஐந்தாறு பேர், யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற யாழ்தேவி ரயிலுக்காக ரயில் மேடையில் காத்து நின்ற பிரயாணிகள் மீது திடீரென 'டுமீல் டுமீல்' எனச் சுட்டார்கள்.

ரயில் கிளிநொச்சி நிலையத்தைச்சென்றடைவதற்குச் சுமார் அரை மணி நேரத்துக்கு முன்னர் இந்த அதிர்ச்சி தரும் பயங்கரம் இடம் பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பதினொருபேர் ரயில் நிலைய மேடையிலேயே சுருண்டு விழுந்து மாண்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர்.

கிலி கொண்ட ஏனைய பயணிகள் சிதறி ஓடினர்.

அனேகமாக அதே நேரத்தில், கூட்டு முகாம் பக்கத்தில் இருந்து வந்த ஷெல் குண்டுகள் நகரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடல் எல்லைக்குள் வந்த இந்தியக் கப்பல்

கொழும்பு, ஜன. 26

இந்தியக் கரையோரப் பாதுகாப்புக் கப்பல் ஒன்று இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் காணப்பட்ட இந்தியக் கப்பலை நோக்கி இலங்கைப் பீரங்கிப் படகுகள் சென்றன.

விசாரித்தபோது, இயந்திரக் கோளாறு காரணமாக இச் சம்பவம் இடம் பெற்றதாக இந்தியக் கப்பல் கப்டன் தெரிவித்தாராம்.

இதைத் தொடர்ந்து இலங்கைப் பீரங்கிப் படகுகள் இரண்டு இந்தியக் கப்பலைப் பாதுகாப்பாக இந்தியக் கடல் எல்லைக்குள் விட்டு விட்டுத் திரும்பிவிட்டன.

இப்படிப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின

## நாவற்குழியில் நேற்றும் துப்பாக்கிச் சூடுகள்

நல்லூர், ஜன. 26

நேற்றும் நாவற்குழிப் பகுதியில் குண்டு வெடிப்புக்களும் துப்பாக்கிச் சூடுகளும் இடம் பெற்றன.

இதனால் இப்பகுதியில் நேற்றும் பதற்றம் நிலவியது.

மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர்.

## கல்வித் திணைக்களம் முன் நேற்றும் மறியல்

### ஊழியர் திரும்பிச் சென்றனர்

நல்லூர், ஜன. 26

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக நேற்று நான்காவது நாளாக மறியல் போராட்டம் நடந்தது.

மறியல் போராட்டத்தில் நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

நேற்று விடுமுறை தினமாக இருந்தபோதிலும் சில ஊழியர்கள் கல்வித் திணைக்களத்துக்குக் கடமைக்கு வந்தனர், பின்னர் அவர்கள் அங்கு நின்ற மறியல் போராட்டக் காரர்களினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமான மறியல் போராட்டம் பகல் 12 மணிவரை நடந்தது.

# குடியுரிமை சட்ட மூலம்

## அரசமைப்புக்கு உட்பட்டதா?

### உயர் நீதிமன்றம் நாளை தீர்மானிக்கும்

கொழும்பு, ஜன. 26

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் சட்ட மூலம் அரசமைப்புச்சட்டத்துக் குட்பட்டதா?

இது பற்றி உயர்நீதிமன்றம் நாளை தீர்மானிக்கும்.

பிரதம நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா, நீதியரசர்கள் பரிந்த ரணசிங்கா, எஸ். எச் டி. அல்விஸ் இது சம்பந்தமான விசாரணையை ஒரே நாளில் நடத்தி முடிப்பர்.

இதனிடையில் சட்ட மூலம் அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டது என்று சுதந்திரக் கட்சி உயர் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவும் நாளை விசாரணை செய்யப்படும்.

விசாரணை நடைபெறும்தினத்தில் எவரும் முன்வந்து சட்டமூலத்தை எதிர்த்து மனுதாக்கல் செய்யலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இதனிடையில், சட்ட மூலம் பற்றிய விவாதத்தை இரண்டு தினங்களுக்கு நடத்த அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

முதலில் ஜனவரி 31 ஆம் திகதியல் நடத்தி முடிக்க அரசு திட்டமிட்டு இருந்தது.

இ பொழுது ஜனவரி 30, 31 ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்த அரசு முடிவு செய்து இருப்பதாகத் தெரிகிறது.

# நல்லூர் இந்து விடுதியில் கையெழுத்து இயக்கம்

## சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படும்

நல்லூர், ஜன. 26

பாதுகாப்பு வலயம் சம்பந்தமான கையெழுத்து இயக்கம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் இந்து விடுதியில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

இத்தகவலை நேற்று இந்து விடுதியில் நடைபெற்ற பிரஜைகள் குழுவின் இணைப்புக் கூட்டத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

1000 மீட்டர் பாதுகாப்பு வலய பிரச்சினை எவ்வாறு வடக்கு கிழக்கு பகுதிகளையும் குறிப்பாக யாழ் குடாநாட்டையும் பாதிக்கிறது என்பதையும் இக்குழு ஆராய்ந்தது.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மக்களிடையே காணப்படும் பீதி உணர்வை நியாயப்படி அறிந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முற்முனைப்பட்ட வழிகளில ஆராய்ந்து எடுப்பதெனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினையால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் பற்றி எடுத்துக் கூறி பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறும் சன நெருக்கடியான இடங்களில் உள்ள பாதுகாப்பு முகாம்களை அகற்றுமாறும் நியாயமான தீர்வினை ஏற்படுத்தக் கூடிய வகையில் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதியைக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## 79 தமிழர் பூஸாவுக்கு

திருகோணமலை, ஜன. 26

நிலாவெளியைச் சேர்ந்த 79 தமிழர், பூஸாவுக்கு ஆயுதப்படையினரால் கொண்டு போகப்பட்டனர்.

இவர்கள் மீதான விசாரணைகள் திருமலை நகரில் உள்ள வெளதத யாத்திரிகர் விடுதியில் நடந்தன.

அதன் பின்னர்தான் இவர்கள் பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## பிரிட்டிஷ் பெண் உளவாளியாம்

### ஈரோஸ் தகவல்

நாம் பிடித்து வைத்துள்ள பிரிட்டிஷ் பெண், ஒரு பத்திரிகையாளர் அல்லர். அவர் பிரிட்டனில் உள்ள பாதுகாப்புக் கல்வி நிறுவனம் ஒன்றின் ஊழியர். இதனை அந்தப் பெண்ணே ஒப்புக் கொண்டுள்ளார்.

இவ்வாறு முல்லைத்தீவில் வைத்துப் பிடிக்கப்பட்ட பீனிலோப் வில்லிஸ் என்பவர் தமக்குத் தெரிவித்திருக்கிறார் என்று ஈரோஸ் அமைப்பின் பேச்சாளர் ஒருவர் இங்கு ராய்டரிடம் தெரிவித்தார்.

அந்தப் பெண் இருதய நோயாளியாக இருப்பதால் அவருக்கு மருந்து கொடுக்கத் தாம் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

''பிரஸ்தாப பெண்மணி உளவு ஸ்தாபனம் ஒன்றின் கையாள் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. எனினும் விசாரணை முழுக்க முடிந்த பின்னரே அவரை விடுதலை செய்வோம்'' என்றும் ஈரோஸ் பேச்சாளர் ராய்டரிடம் தெரிவித்தார்

# கொட்டியா சுட்டதாக சொல்லுங்கள்

## சிருடையினர் இப்படிச் சொன்னதாக காயமடைந்தவர் ஒருவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 26

பிற்பகல் 2-30 மணி அளவில் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நான் நின்று கொண்டிருந்த போது சிருடையினர் அங்கு வந்து சுட்டனர். சுட்டுவிட்டு கொட்டியா சுட்டதாகச் சொல்லுங்கள் என்று அவர்கள் கூறினர்.

உடையார் கட்டு, சுகந்தபுரத்தைச் சேர்ந்த முத்தையா தர்மலிங்கம் (29 வயது) மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சிரயில்நிலைய துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயம் அடைந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

26.1.1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9.36 முதல் 11.06 வரை

ராகுகாலம்:

5.06 முதல் 6.36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 26

நேற்று நண்பகல் இடம் பெற்ற கிளிநொச்சி துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்தவர்களில் பதினொருபேர் நேற்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு இ போ. ச. பஸ் மூலம் கொண்டுவரப்பட்டனர்.


இவர்களுக்கு யாழ். பெரியாஸ்பத்திரியில் அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இவர்களில் ஏழு பேர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்

இவர்களைத் தவிர மேலும் ஐவர் கிளிநொச்சி

(4-ம் பக்கம் பார்க்க)

## முச்சந்திமுரளி



பெரும்பான்மை ஆக்களிலை இரண்டு பேருக்கு காயம் வந்தாலும் சிறுபான்மையினரில இருபது பேரை எப்பிடியும் கொன்றுவிடவேணும் எண்டு ''மொசாட'' சொல்லிக் குடுத்திருக்குமோ என்னவோ...!

## கடும் சுகயீனமடைந்தோரே யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம் ஜன 25

கடுமையான சுகயீனத்துடன் வரும் நோயாளிகளே இனி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவர்.

இப்படி ஆஸ்பத்திரி வட்டாரங்கள் முடிவு எடுத்துள்ளன என்று அறியப்படுகின்றது.

பாதுகாப்பு வலயம் பிரகடனத்தைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வட்டாரங்களில் நிலவும் பதற்றம் இன்னும் தணிந்தபாடாக இல்லை.

போதாக்குறைக்கு நேற்று முன்தினமும் கோட்டைப் பக்கமாக இருந்து துப்பாக்கிச் சூடுகள் ஆஸ்பத்திரிப்பக்கமாகவும் வந்தனவாம்.

இது இன்னும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

கடுமையானநோயாளிகளை மட்டுமே ஆஸ்பத்திரியில் அனுமதிப்பது என்று வைத்திய வட்டாரங்கள் முடிவு எடுத்துள்ளன என்று தெரிகிறது.

விடுதிகளில் தங்கவும் டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் அஞ்சுகின்றனர்.

நோயாளர்களுக்கும் பாதுகாப்பு இல்லை—இப்படி ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறுகின்றன.

## ஹெலிக்கொப்டர் சுட்டபோது நான் பிள்ளைகளை தூக்கிக்கொண்டு ஓடினேன்

### நாவற்குழி தாக்குதல் பற்றி பெண் தகவல்

நல்லூர், ஜன. 26

ஹெலிக்கொப்டரில் இருந்து குண்டுகள் திப்பிழம்பாக கக்கியபோது நான் பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு தப்பி ஓடினேன்.

நாவற்குழித் தாக்குதலின்போது இடம் பெயர்ந்து பாஷையூர் அந்தோனியார் கோயிலில் தஞ்சம் அடைந்த பெண் ஒருவர் மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அந்தோனியார் கோயிலில் அடைக்கலம் புகுந்த சுமார் 60 பேரில் இப்பெண்ணும் ஒருவர்.

இப்பெண் மேலும் தெரிவித்ததாவது:-

இரவு ஒன்பது மணி அளவில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது நாவற்குழிப் பக்கமாக வெடிப்புச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன, பீதியில் எனது குழந்தைகள் வீரிட்டு அலறின.

குண்டு வெடிப்பு சில நிமிடங்களில் நின்று விடும் என்று நினைத்துப் படுக்கைக்குத் தயாரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி பகுதியிலிருந்து மக்கள் இடம் பெயர்வு

கைதடி, ஜன. 26

நேற்று முன் தினம் நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலின் போது நாவற்குழி அரியாலைப் பகுதிகளில் இருந்து பலர் இரவோடு இரவாக வெளியேறினர்.

முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் பாஷையூர் அந்தோனியார் கோவிலிலும், கொழும்புத்துறை யூதா கோவிலிலும் பலர் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நாவற்குழி – கேரதீவு வீதி, கைதடி ஆகிய பகுதிகளுக்கும் பலர் இடம் பெயர்ந்தனர்.

ஹெலிகொப்டர் தாக்குதலின்போது இரு வீடுகள் சேதம் அடைந்தன. பல வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன.

கொழும்புத்துறை ஐயனார் கோவிலிலும் சிறிது சேதம் அடைந்துள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

நலலூர் ஜன.26

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு மேலும் ஒரு அம்புலன்ஸ் வந்து கொண்டிருக்கிறது.

போதனை வைத்திய சாலைகள்அமைச்சுஇதனை அனுப்பிவைத்தது.

யாழ். வைத்தியசாலையில் கடந்த ஒரு வருட காலமாக ஒரேஒரு அம்புலன்ஸ் மட்டுமே இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## நேற்றும் ஹெலிக் கொப்டர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 26

தெல்லிப்பளை, வயாவிளான் பகுதிகளில் நேற்றும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இத்தாக்குதல்களில் சுமார் 8 வீடுகள் சேதம் அடைந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

## வெல்லாவெளி பொலீஸ் நிலையம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு, ஜன. 26

வெல்லாவெளி பொலீஸ் நிலையத்தின் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினர்கள்.

வெள்ளிக்கிழமை (24-1-86) இரவு 10-30 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

அரை மணித்தியாலமாக இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர்.

விமானப்படையைச் சேர்ந்த ஹெலிக்கொப்டர் ஒன்று அந்த இடத்துக்கு விரைந்து சென்று படையினருக்கு உதவியது.

ஹெலிக்கொப்டரில் இருந்தும் சுடப்பட்டது.

இரு தரப்பினருக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சிப் படைகள் முன்னேறுகின்றன

## உகண்டாவில் உக்கிர சண்டை

கம்பாலா, ஜன. 25

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவைப் பிடிப்பதில் கிளர்ச்சிப் படைகள் வலுப்பெற்று உள்ளதாக அறிவிக்கப் பட்டது.

ஆட்சியைப் பிடிப்பதற்கு அரசுப்படைகளுடன் கிளர்ச்சிப்படைகள் சண்டை இடுகின்றன.

இச்சண்டை தீவிரம் அடைந்துள்ளதாக கம்பாலாவில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சிப் படைகள் பலம் பெற்று விளங்குவதாகவும், கம்பாலாவை நோக்கி முன்னேறுவதாகவும் கூறப்படுகின்றது.

அரசு– கிளர்ச்சிப்படைகள் வீதி குவீதி சண்டையில் ஈடுபட்டிருந்தன

இதனால் ஏராளமான பொதுமக்கள் மாண்டனர் என்றும் அறிவிக்கப் பட்டது

புரட்சி மூலம் பதவிக்கு வந்த அரசுத் தலைவர்களுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கு இடையே சமரச உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

பின்னர் அது முறிவு அடைந்து விட்டது. அதைத் தொடர்ந்தே ஆட்சியைப் பிடிக்க இக் கடும் சண்டை இடம் பெறுகின்றது.

# வெளி உலகில்

## இந்திய விமான படையில் நவீன குண்டு வீச்சு விமானங்கள்

புதுடில்லி, ஜன. 25

இந்திய விமானப்படையின் விமானங்கள் புதிய முறையில் குண்டுத் தாக்குதலை நடத்தும் சாதனம் ஒன்றைப் பயன்படுத்த உள்ளது.

யுத்த விமானத்தின் வால் ளில் இச்சாதனம் பொருத்தப் பட்டுள்ளது.

இந்த விமானம், இன்று நடைபெறும் இந்திய குடியரசு தின ஆயுதப்படை அணிவகுப்பில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது.

பாரசூட்டுடன் குண்டு பொருத்தப்பட்டிருக்கும்.

வானத்திலும் நிலத்திலும் எதிரிகளின் இலக்குகளை வெற்றிகரமாகத் தாக்கக்கூடியதாக இச்சாதனம் அமைந்துள்ளது.

மேற்கு ஆசியாவில் இது போன்ற விமானம், யுத்தங்களில் நன்றாகச் செயற்பட்டது நிரூபிக்கப் பட்டுள்ளது.

இது மாதிரியான சண்டை விமானங்களுக்கு ஏனைய நாடுகளில் நல்ல கிராக்கி உண்டு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தட்சருக்கு மற்றொரு நெருக்கடி

லண்டன், ஜன. 25

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சருக்கு இன்னொரு அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சர் திரு. லியோன் பிரிட்டனுக்கு எதிரான ஊழல் புகாரைத் தொடர்ந்து இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வெஸ்ட்லண்ட் ஹெலிக்கொப்டர் நிறுவனம் ஒன்று சம்பந்தமான ஊழலில் தான் இந்த அமைச்சர் சிக்கியுள்ளார்.

அவரை ராஜினாமாச் செய்யும்படி வற்புறுத்தப்பட்டுள்ளது.

## தென்யேமன் உள்நாட்டு போரில் ரஷ்யா தலையிடாது

மாஸ்கோ, ஜன 25

தென்யேமனில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தில் ரஷ்யா தலையிடாது

வெளிநாட்டுத் தூதர்களுக்கு இப்படி ரஷ்யா அறிவித்துள்ளது.

உள்நாட்டில் இடம் பெறும் யுத்தத்தில ஈடுபடுபவர்களுக்கு ஆயுதங்களை ஏனைய நாடுகள் வழங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ரஷ்யா கோரி உள்ளது.

## பஞ்சாப் - ஹரியானா தகராறு: ஆணைக்குழு அறிக்கை வெளிவந்தது

புதுடில்லி ஜன. 25

பஞ்சாப் – ஹரியானா மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசு நியமித்த மத்தியூ ஆணைக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

பஞ்சாப் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ஆணைக்குழு நியமிக்கப் பட்டது.

இரண்டு மாநிலங்களுக்கும் இடையேயான எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்கவே இக்குழு நியமிக்கப்பட்டது.

குழுவின் தீர்ப்பு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் மட்டுமே பஞ்சாப் மக்கள் அதனை ஏற்பர் என்று மாநில முதல்வர் சுர்ஜித் சிங் பர்னலா தெரிவித்துள்ளார்.

# இந்திய விமான நிலையங்களுள் பார்வையாளர் செல்ல தடை

சென்னை, ஜன. 25

இந்திய விமானநிலையங்களுக்குள் பார்வையாளர் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 31 வரை இத்தடை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள சர்வதேச, உள்ளூர் விமான நிலையங்களுக்கு இந்த உத்தரவு பொருந்தும்.

இந்திய சர்வதேச விமான நிலைய அதிகாரசபை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தினம், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிறைய பார்வையாளர் இருந்தனர்.

இவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

## விஜயாவைக் கிண்டல் செய்கிறார் நளினி

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகைகளில் நளினியும் ஒருவர். இவர் "நவக்கிரக நாயகி", சமயபுரத் தாளே சாட்சி" போன்ற படங்களில் தெய்வ வேடமேற்று நடித்துள்ளார்.

இவரிடம் "இப்படிப்பட்ட வேடங்களில் கே. ஆர். விஜயாதானே நடிப்பார், நீங்கள் நடிக்கிறீர்களே ஏன்?" என்று கேட்கப்பட்டது.

"விஜயா அம்மாவுக்கு உடம்பு பெருத்து விட்டது, வயதாகியும் விட்டது இனி அவர் சாமி வேடத்திற்கு லாயக்கில்லை, பூதம் வேடத்திற்குத் தான் பொருத்தம்!" என்று கூறிச் சிரித்தாராம்.

### புது வீட்டில் ஊர்வசி

வாடகை வீட்டில் வசித்து வந்த ஊர்வசி சொந்த வீட்டில் குடி புகுந்து விட்டார்.

என்றாலும் ராசியான பழைய வீட்டையும் அவர் மறக்கவில்லை. மாதம் ஒரு முறை அசோக் பில்லரில் உள்ள அந்த வீட்டைச் சென்று பார்வையிட்டு வருகிறார்.

### அர்ஜுனின் "வேட்டை"

ஜி.ஆர்.பி. ஆர்ட்ஸ் பட நிறுவனத்தினர் ஒரு கராட்டி வீரனின் கதையைப் படமாக்குகிறார்கள். இப்படத்திற்கு "வேட்டை" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதில் தமிழ்ப்படவுலகில் மிக வேகமாக முன்னேறி வரும் நடிகர் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக அனிதா வருகிறார்.

அர்ஜுன், அனிதா, டிஸ்கோ சாந்தி சம்பந்தப்பட்ட பாடல் காட்சி ஒன்று திருவான்மியூர் கடற்கரையில் படமாக்கப்பட்டது.

"வேட்டை" படத்தை இயக்குனர் எஸ் ஏ சந்திரசேகர் இயக்குகிறார்.

தினசரி சினிமா

## 1991 உடன் வெளிநாட்டு தொழிலாளரை சிங்கப்பூர் வெளியேற்றுவதில் சங்கடம்

சிங்கப்பூர், ஜன. 25

1991 உடன் வெளிநாட்டுத் தொழிலாளர்களை வெளியேற்றும் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடியாத நிலை சிங்கப்பூருக்கு ஏற்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமான மனித சக்திக் கமிட்டி இதனைத் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் தரத்திலான வேலைக்கு வர சிங்கப்பூர் வாசிகள் பின்னிற்பதே இதற்குக் காரணமாகும் என்று அக் கமிட்டி தெரிவித்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாடு வெற்றி அளித்தது, பாடசாலையில் படிப்பை இடைநடுவில் முறித்துக் கொண்டு மாணவர் வெளியேறுவது ஆகியன குறைந்ததே, தொழிலாளர் வேலைக்கு சிங்கப்பூர் வாசிகள் பெரும் எண்ணிக்கையில் சேர முன்வராமைக்கு இன்னொரு காரணம் என்றும் அக்கமிட்டி தெரிவித்துள்ளது.

## பருத்தித்துறை மீன்சந்தை பொதுச்சந்தை மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றம்

பருத்தித் துறை, ஜன. 26

பருத்தித்துறை பொதுச்சந்தை, மீன் சந்தை ஆகியன மீண்டும் பழைய இடங்களுக்கு கடந்த செவ்வாய்க் கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

புதிய ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து பருத்தித்துறை சிவன் கோவில் வடக்கு வீதியான தும்பளை வீதியில் நடை பாதைகளில் தற்காலிக பொதுச்சந்தையும் நடமாடும் கடைகளும், திக்கமுனை விளையாட்டரங்கில் மீன் சந்தையும் சில தினங்கள் செயல்பட்டன.

பின்னர் பொதுச் சந்தை மருதடி வைரவர் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தனியார் காணி ஒன்றுக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டது.

இத்தற்காலிக பொதுச் சந்தைக்கு முன்னால் ஒரு பகுதி மீன் வியாபாரிகளும் திக்கமுனை விளையாட்டரங்கில் மற்றைய பகுதி மீன் வியாபாரம் செய்து வந்தனர்.

அதே வேளை நடமாடும் பலசரக்கு, பளிகைச் சாமான், தேனீர்க் கடைகள் தும்பளை வீதியிலேயே தொடர்ந்து செயல்பட்டு வந்தன.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் உட்பட சில பொது ஸ்தாபனங்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க் கிழமை முதல் பருத்தித்துறைநகரத்தில் நகரசபைக்குச் சொந்தமான சந்தைக் கட்டடத்தில் பொதுச் சந்தையும் முதலாம் குறுக்குத்தெரு வில மீன் சந்தையும மீண்டும கூடின.

அதே நேரம் நகரத்தில் கடைகளை மூடிய வர்த்தக நிலையத்தினர் கடைக்காரர்களில ஒரு சிலர் தமது வர்த்தக நிலையங்களையும் கடைகளையும் சிறுது சிறிதாக திறக்க ஆரம்பித்துள்ளனர்.

இவற்றில் ஒற்றை இரட்டைக் கதவுகளிலே ய வியாபாரம நடை பெற்று வருகிறது.

ஆங்குள்ள தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகள் குறுகிய நேரம் மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

இ.போ.ச பஸ் சேவைகள் தனியார் மினி பஸ் சேவைகள் பருத்தித் துறை பஸ் நிலையத்திலிருந்தே கடந்த செவ்வாய்க்கிழமை முதல் சேவையாளராராபட்டு வருகின்றன.

## உழவர் விழா

யாழ்ப்பாணம், ஜன 26

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் உழவர் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

கழகத் தலைவர் திரு. க. கமலநாதன் தலைமை வகித்தார்.

## புதிய செயலக கட்டடத்தில் நகரமண்டபம் இராது

### முனையை இடத்தி ...ல் அமையும்

யாழ்ப்பாணம், ஜன 26

யாழ். மாநகராட்சி மன்றத்தின் புதிய செயலகக் கட்டடத்தில் நகர மண்டபம் அடங்க மாட்டாது. நகர மண்டபம் தற்பொழுது உள்ள இடத்திலேயே மீண்டும் நவீன முறையில் அமைக்கப்படும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு :–

யாழ். மாநகராட்சி மன்றத்தின் புதிய செயலகக் கட்டட அமைப்பைப் பார்வையிட்ட சிலர் பூங்கா, நூலகம், திறந்த வெளியரங்கு ஆகியவையும் இடம் மாற்றப்படுகின்றனவா என்று எம்மிடம் விசாரித்தனர்.

தயாரிக்கப்பட்ட மாதிரியின்படியும், வரைபடங்களின்படியும் இக் கட்டடம் முற்று முழுதாக சகல நிர்வாக, செயலகப் பகுதிகளை உள்ளடக்கிய மாநகராட்சி மன்ற செயலகமாகவே இருக்குமென்பதையும், இதில் நகர மண்டபம் உள்ளடக்கப் படவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

சுப்பிரமணியம் பூங்காவை ... அதற்குப் பதிலாக ஒரு பூங்காவை நல்லூரில் அமைப்பது என்ற எண்ணமே எமக்கில்லை.

அதேபோல திறந்த வெளியரங்கையும் கைவிடுவதாகவோ அல்லது அதற்குப் பதிலாக ஒரு அரங்கை நல்லூரில் அமைப்பதாகவோ இத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

நூலகத்தைப் பொறுத்தவரை தற்பொழுது நல்லூரில் இயங்கும் கிளை நூலகத்திற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படுமே தவிர அது பொது நூலகக் கட்டடத்திற்கு மாற்றுக் கட்டடமாக அமையாது, என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

### நூல் வெளியீட்டு விழாவும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், ஜன. 26

நாராயணதாசன் பஜனைப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழாவும் நூலாசிரியர் பாராட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய மண்டபத்தில் வித்துவான் மு. சபாரத்தினம் தலைமையில் வைபவம் நடைபெற உள்ளது.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா, நூலாசிரியரை பொன்னுடை போர்த்துக் கௌரவிப்பார்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## தெல்லிப்பளை - வயாவிளான் பகுதிகளில் சேதமான வீடுகள்

பலாலி, ஜன. 26

தெல்லிப்பளை, வயாவிளான் வீதயில் பின்வருவோரின் வீடுகள் சேதமாக்கப்பட்டன.

சேதம் அடைந்த வீடுகள் விவரம்:–

1. திரு. கந்தசாமியின் வீடு, துப்பாக்கிச் சூடும், கல்லெறியும். வானொலிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி முற்றாகச் சேதம்.
2. திரு. சண்முகம் பொன்னையாவின் வீடு, ஜன்னல், சுவர் என்பன துப்பாக்கிச் சூட்டாலும், கல்லெறியாலும் சேதம்.
3. திரு. ஐயாத்துரை கந்தையாவின் வீடு, ஜன்னல், கதவு என்பன சூடுபட்டும், கல்லெறி பட்டும் சேதம்.
4. திரு. கனகசபை கணேசமூர்த்தியின் வீடு, கவசவாகனசசூடு மூன்று அறைகளை ஊடறுத்துக் கொண்டு வெளியால் சென்றது. அம்மன் சொரூபம் ஒன்றுக்கு அண்மையில் மூன்று சூடுகள பட்டும் சிலை பாதிக்கப்படவில்லை.

இவ்வீட்டில் 53 சூட்டு அடையாளங்கள் காணப்பட்டன. வீட்டின் முன் 15 நிமிடங்கள் நின்று சீருடையினர் சுட்டனர்.

5. திரு. இராசையா குகதாஸின் வீடு, ஜன்னல், மின்மானி என்பன சூடுபட்டு சேதம்.
6. திருமதி பொன்னம்மா பரமநாதரின் வீடு, ஜன்னல், கதவு, மேல் கூரை என்பன சேதம்.
7. திரு. அப்பாக்குட்டி நல்லையாவின் வீடு, மதில் உடைக்கப்பட்டது. வீடு துப்பாக்கிச் சூட்டால் சேதமடைந்தது.
8. திரு. செல்லையா தருமலிங்கம் என்பவரின் வீட்டு ஓடுகள், சுவர் என்பன சேதம் அடைந்தன.
9. திரு. வேலுப்பிள்ளை கந்தையா என்பவரது வீடும்,
10. திரு. பரமேஸ்வரன் (கணக்காளர்) என்பவரது வீடும்,
11. திருமதி. சங்கரப்பிள்ளை நாகரத்தினம், (தபால் அதிபர்) அவர்களது வீடும், கல் எறியாலும், கவசவாகனச் சூட்டாலும் சேதம்.
12. திரு. இராசமாணிக்கம் என்பவரது வீடும்,
13. திரு. முத்துக்குமாரு தம்பிராசா என்பவரது வீடும்,
14. திரு. வே. இராமநாதன் (சமூக சேவைப் பகுதி) என்பவரது வீடும் சேதம்,
15. திரு. எஸ். செல்வரத்தினத்தின் வீடு, (மயிலிட்டி தெற்கு சாதனா பாடசாலை ஆசிரியர்) பிள்ளைதொட்டில், வீடியோ கமெரா, பெட்டி என்பன சேதம். ஜன்னல், சுவர் என்பன கடுமையான சேதம்.
16. பொன்னம்பலம் சண்முகரத்தினம்,
17. ஜின்னே வீடியோ சென்டர்,
18. திரு. தி. செல்வரத்தினம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) என்பவரது 10 ஆயிரம் ரூபா பெறுமதியான குக்கர், குளிர்சாதனப் பெட்டி, ஜன்னல் கண்ணாடி, கூரைகள் முற்றாகச சேதம்,

திரு. வேலுப்பிள்ளை என்பவரின் வேலி, வீடு என்பன எரிக்கப்பட்டன.

இவற்றுடன் எவருமே இலலாத 6 வீடுகளும் சேதமாக்கப் பட்டிருந்தன.

## பாதுகாப்பு வலயம்: வாபஸ்பெற, யாழ் பிரஜைகள்குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன 26

யாழ்ப்பாண மக்களின் தொழில், கல்வி உட்பட வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் பாதித்து அவர்கள் மத்தியில் மரண பயத்தை ஏற்படுத்தி உள்ள ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை உடனே வாபஸ் பெறவும்.

யாழ்ப்பாண பாதுகாப்பு வலயத் திட்டம் தொடர்பாக யாழ் பிரஜைகள் குழு கூட்டிய மாநாட்டில் இக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வி. அருமைநாயகம் தலைமையில் நடந்தது.

பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள், யாழ் நகரில் உள்ள திணைக்களங்களின் ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மருத்துவ கலாநிதிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், ஆகியோர் பங்குபற்றிக் கருத்துரை வழங்கினர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, மருத்துவ கலாநிதி ஜெகா பசுபதி, வண. பிதா கோவிந்தராஜ், வட பிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழுத் தலைவர் திரு எஸ். விஜயானந்தன், தபால் பொது ஊழியர் சங்க செயலாளர் திரு. எஸ் தங்கவடிவேல், புகையிரத நிலையத் தலைவர் திரு. கே. ராஜா, மாநகர ஆணையாளர் திரு. சி.வி. கே. சிவஞானம், ஜனாப் எஸ்.ஏ. ரகீம், மத்திய கல்லூரி உபஅதிபர் திரு. கே. இராசரத்தினம் உட்படப் பலரும் கருத்துரை வழங்கினார்கள்.

### பதவி பொறுப்பு ஏற்றார்

கொடிகாமம், ஜன. 25

சாவகச்சேரி மின்சார சபை அத்தியட்சகராக திரு எஸ். சபாரத்தினம் கடமைப் பொறுப்பு ஏற்றார்.

மினி சினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
Timothy Brent.
Tony Marcel,
Alan Corllians,
TORNADO
நவீன ஆயுதங்களைப் பாவித்துப் போராடும் மிகச் சிறந்த படம்

இதோ
அறிமுகப்படுத்துகின்றோம்!
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
இன்சுவை, பல்சுவை, தரம், தராதரம்
இவற்றை ஒரே நேரத்தில்
உங்கள் மழலைச் செல்வங்களுக்கும்
உங்கள் இல்லங்களுக்கு வருகைதரும்
விருந்தினருக்கும் களிப்பூட்ட பரிமாறுங்கள்:
FROZEN FOODS
ஐஸ் கிறீம்
என்றும் சிறந்ததையே வழங்கும்
செனித் மார்கட்டிங்
ஸ்தாபனத்தின் மற்றும் ஒரு புது முயற்சி
ஏகப் பிரதிநிதிகள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங், யாழ்நகர்.
ஏக கையிருப்பாளர்கள்:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்)
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
மற்றவர்கள் செய்யும் சத்தியத்தை நாங்கள் காப்பாற்றுகின்றோம்.
விலை விபரங்கள்:

| | |
|---|---|
| பிளாஸ்டிக் கப் (வனிலா) | 4-50 |
| சொக்கலேட் | 4–75 |
| பெமலி புளக் | 23–50 |
| கலன் | 140–00 |

கூடிய கொள்முதலுக்கும், விசேட ஓடர்களுக்கும் சலுகைகள் உண்டு.
விபரங்களுக்கு:
வரணி மிஷன் பாம்
(விற்பனை நிலையம்) யாழ்நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நம்மை நாமே தூற்றிக் கொள்ளக் கூடாது. முன்னேற்றம் அடைய வேண்டுமானால் முதலில் நம்மில் நாம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னர் கடவுளில் நம்பிக்கை வைப்போமாக!

-சுவாமி விவேகானந்தர்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

26-01-86 த. பெ. 28


## யாருக்கு யார் பாதுகாப்பு?

வடபகுதியில் இருக்கும் இராணுவ முகாம்களைச் சுற்றி உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்கள் இப்போதைக்கு ரத்துச் செய்யப்படமாட்டா.

இலங்கையின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் திரு லலித் இவ்வாறு நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

அவரது பேச்சில், எந்தத் தமிழ் மகனுக்கும் எரிச்சலூட்டும் இரண்டு முக்கிய விடயங்கள் கருத்தைக் குத்தி நிற்கின்றன.

பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் வாழும் மக்களை அந்த வலயம் பாதிக்காது என்பது அவரது முதலாவது கண்டுபிடிப்பு.

போராளிகள் தம்மை நோக்கிச் சுடுகிறார்கள் என்று கூறி, படையினர் பீரங்கிகளைச் சுழற்றினால் அது அந்தப் பகுதியில் வாழும் மக்களைப் பாதிக்காமல் காற்றையும் வானத்தையும் பாதிக்கும் என்று திரு. லலித் கண்டு பிடித்திருக்கிறாரோ! ஒக்ஸ்போர்ட்டில் போய்ப் படித்த இந்தப் புத்திசாலித்தனத்துக்காகத் தான் அவருக்கு பந்தோபஸ்து அமைச்சர் பதவி வழங்கப்பட்டது போலும்.

மோட்டோ ஷெல் குண்டுகளே, கடந்த ஒரு வார காலத்திற்குள் ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்களின் உயிர்களைக் குடித்து விட்டன. அப்படியிருக்கப் பாதுகாப்பு வலயம் அந்தப் பகுதியில் வாழும் மக்களைப் பாதிக்காது என்று ஒரு பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறாரே. அவர் யாருக்குப் பாதுகாப்பு அமைச்சர்? இராணுவத்தினரின் உயிரைப் பாதுகாக்கும் கடமை மட்டுந்தான் அவருக்கு உண்டு; மக்களைப் பாதுகாக்கும் கடமை அவருக்கு இல்லை. அதையே அவர் இப்படிச் சொல்லியிருக்க வேண்டும். குறிப்பாக அவர் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அமைச்சர் அல்லர் என்பதைத் தாமே ஒப்புக் கொண்டு விட்டார்.

பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டது பாதுகாப்புத் தந்திர நடவடிக்கை. அதில் பொதுமக்கள் தலையிட முடியாது. இது அவரது இரண்டாவது குருட்டு வேதாந்தம்.

பாதுகாப்புப் படையும், பாதுகாப்பு அமைச்சும், அரசும் யாருக்காக? ஜனநாயக நாடுகளில் எல்லாம் மக்களுக்காகத் தான் அரசாங்கம் நடக்கிறது. மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்குச்சேவை புரிவதற்காகவும் தான் பாதுகாப்புப்படை, பட்டாளம் எல்லாம். ஆனால் இங்கு தலைகீழாக இருக்கிறது. படைகளைப் போராளிகளிடம் இருந்து காப்பாற்றுவதற்காக மக்களின் உயிர் பணயம் வைக்கப்படுகிறது இது இலங்கையின் புதுவித ஜனநாயகம். இந்த வரைவிலக்கணத்தை நாம் சொல்லவில்லை. ஒக்ஸ்போர்ட் 'உற்பத்தி' யான பாதுகாப்பு அமைச்சர் லலித் தான் கூறியிருக்கிறார்!

அதன் மூலம், தாம் மட்டுமன்றி இந்த அரசாங்கமும் தமிழர்களின் அரசாங்கம் இல்லை என்று கூறுகிறார்.

ஆகவே அவரும் அவரது அரசாங்கமும் உடனடியாக ஒன்றைச் செய்ய வேண்டும். இராணுவத்தை இங்கிருந்து அழைத்துக் கொண்டு போய் தங்கள் பகுதிகளில் வைத்து பாதுகாப்பை மேற்கொள்ளட்டும்.

தமிழ் மக்கள் தங்களுக்குத் தாமே பாதுகாப்புத் தேடிக் கொள்ளட்டும். கடந்த 22 ஆம் திகதிக்குப் பின்னர் சிவில் நிர்வாகம் இங்கு முற்றாக ஸ்தம்பித்து விட்டதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு செய்யவிருப்பம் இல்லையெனில் நிராயுதபாணிகளான தமிழ் சிவிலியன்களோடு ஆயுதபாணிகளான தனது படைகள் யுத்தம் செய்யப் போகின்றன என்று பிரகடனம் செய்துவிட்டு, மோட்டோஷெல்களையும் பீரங்கிகளையும் பாவிக்கட்டும்.

தமது படைகளைப் போராளிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக தமிழ் மக்களைப் பணயம் வைத்து பாதுகாப்பு வலயம் பிரகடனம் செய்வதைவிட இது மிகவும் மேலானது. அமைச்சர் லலித்தும் அவரது அரசும் வேண்டுமானால் அப்படிச் செய்யட்டும்.

## பாண்டிருப்பு சுற்றிவளைப்பு

அம்பாறை ஜன. 26

கல்முனை தொகுதியில் உள்ள பாண்டிருப்பு தமிழ் கிராமம் நேற்று அதிகாலை கமாண்டோக்களினால் சுற்றி வளைக்கப்பட்டது.

500 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

# கிறிஸ்து உலகில் நிலைநாட்டியது

# உண்மையின் அரசு

கிறிஸ்து இவ்வுலகில் நிலைநாட்டியது உண்மையின் அரசாகும் கிறிஸ்து வார்த்தையளவில் இறைக் கூறிவிடவில்லை. மனிதனாக இவ்வுலகில் உதித்த கிறிஸ்து இவ்வுண்மை நிலையை முழுமையாக வாழ்ந்துகாட்டினார்.

பகிரங்கப் பணியைக் கிறிஸ்து தொடங்குமுன் அலகையினால் மும்முறை சோதிக்கப்படுகின்றார்.

பாலைவனத்திலே கிறிஸ்து நாற்பது பகலும் நாற்பது இரவும் நோன்பிருந்த பின்பசியுற்றவேளையிலே அலகை அவரை அணுகி 'நீர் கடவுளின் மகனானால் இந்தக்கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும் என்றது.

கிறிஸ்து மறுமொழியாக 'மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர்வாழ்கிறான்' என்றார்.

பின்னர் அலகை அவரைக் கோயில் முகட்டில் நிறுத்தி "நீர் கடவுளின் மகனானால் கீழே குதியும். ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார். உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்" என்றது.

ஞானக்கதிர்

யேசு அதனிடம் 'உன் கடவுளாகிய ஆண்டவரை நீ சோதியாதே' என்றார்.

மீண்டும் அலகை அவரை மிக உயர்ந்த மலைக்குக்கொண்டு போய் உலக அரசுகள் அனைத்தையும் அவற்றின் மாட்சியையும் காட்டி, "நீர் என்னைத் தெண்டனிட்டு வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குக் கொடுப்பேன்' என்றது.

அதற்கு யேசு 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆதரிப்பாயாக' என்றார்.

அதன்பின் அலகை அவரைவிட்டு அகன்றது.

இந்நிகழ்ச்சியிலிருந்து உண்மைக் கடவுளாகிய இறைவனையே ஆராதித்து வணங்கவேண்டுமென்றும், அழிந்து போகும் இவ்வுலகப் பொருள்களிலே, செல்வத்திலே எம் உள்ளத்தைப் பறிகொடாது நிலையான செல்வமாகிய இறைவனிலே எம்பற்றை வைக்கவேண்டுமென்றும் படிப்பிக்கிறார் கிறிஸ்து.

கற்களை அப்பமாக மாற்றும்படி கூறிய நிகழ்ச்சியில், உடற்பசிக்கு உணவு எவ்விதம் அத்தியாவசியமோ, அதேபோன்று ஆன்மீகப் பசியைத் தணிக்க, நித்தியத்திற்கும் உயிர்வாழ இறைவனின் உயிருள்ள வார்த்தைகள் அவசியம் என்ற உண்மை நிலையை எடுத்துணர்த்துகிறார்.

### சகோதரி லூர்து மேரி

இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட எம் சகோதரர்கள் அனைவரையும் அன்பு செய்யவேண்டும். சமாதானமாக வாழவேண்டும். இறைவனின் ஆலயம் சென்று வழிபடும்பொழுது தூய உள்ளம் வேண்டுமென்பதையுணர்த்த 'நானே உங்களுக்குச் சொல்லுகிறேன் தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான்.

நீ பீடத்தின் மீது காணிக்கை செலுத்த வரும்போது உன் சகோதரர்க்கு உன்மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால் அங்கேயே பீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டு முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம்செய்து கொள். பின்னர் வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்று கூறினார்.

எக்கிரியையினாலுமட்டுமன்று எதை விரும்பி ஆவலுடன் உற்றுநோக்குகிறோமோ அதை எம் உள்ளத்தில் அனுபவித்து பாவத்திற்கு அடிமையாகிறோம் என்பதை உணர்த்த 'விபசாரம் செய்யாதே என்று முன்னோருக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள் நானே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும் ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடுவிபசாரம் செய்தாயிற்று' என்று கிறிஸ்து கூறுகிறார்.

நாம் நற்செயல்களைச் செய்யும்போது மனிதர் பார்க்கவேண்டும் புகழவேண்டும் என்ற பெருமிதத்துடன் செய்யாது மறைமுகமாகச் செய்யவேண்டுமென்ற உண்மையையுணர்த்த கிறிஸ்து பின்வருமாறு கூறுகிறார்.

'மனிதர் பார்க்கவேண்டும் என்று உங்கள் நற்செயல்களை அவர்கள் முன் காட்டிக்கொள்ளாதபடி கவனமாயிருங்கள், இல்லையேல் வானகத்திலுள்ள உங்கள் தந்தையிடம் உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது. நீ பிச்சையிடும்பொழுதோ உன் வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும்' என்றார்.



எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு இவையனைத்தும் தேவையென உங்கள்வானகத்தந்தைக்குத் தெரியும்' எனக் கிறிஸ்து மொழிகிறார். இறைவனிலே உறுதியான நம்பிக்கை கொண்டு கவலையின்றி அமைதியாக வாழச் சவால் விடுகின்றார்.

'உங்களுக்குப் பிறர் என்ன செய்யவேண்டுமெனவிரும்புகிறீர்களோ அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் இதுவே' என்றார் கிறிஸ்து.



### பொய்யாமொழி

குறள்:

புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை

பொருள்:

புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்க்கு, இகழ்ந்து பேசும் பகைவர் முன் காளை போல் நடக்கும் பெருமித நடை இல்லை.

## இன்று திர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம் – பண்ணைநகர் கொட்டடி அருள்மிகு ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு இப்பா பிரசுரமாகின்றது.

பண்ணை நகர் கொட்டடியில் பக்தியுடன் பதம் பணியும்
பக்தர்களுக்கு நிதமருளும் பாங்குடை மீனாக்ஷியவள்
கண்ணை இமை காப்பது போல் காக்கும் தேவியவள்
கரங்குவிப்பார் பவ நீக்கும் பராசக்தி அன்னையே நீ
விண்ணைத் தொடும் விரிபுகழ்கும் வினை போக்கும் வித்தகியே!
விநயமுடன் பதம் பணிந்தோம் பவம் நீக்கியருள் தாராய்
மண்ணைத் தின்ற வாயான் மால் மருகன் தாயே நீ
மக்கள் எமைக் காக்க வந்தருள் மீனாக்ஷியம்பிகையே!

– இளஞ்சைவப் புலவர்
இ. ஸ்ரீதான்

# ஆத்மீக வல்லரசான இந்தியா அணுவல்லரசாக மாறுகிறது

## இன்று அதன் குடியரசு தினம்

இந்தியாவின் குடியரசு தினம் இன்று.

ஆத்மீக பலத்தில் 'வல்லரசா'க உருவெடுத்த இந்தியா, இன்று அணு சக்தித் துறையிலும் ஒரு வல்லரசாக மாறிக் கொண்டிருக்கிறது.

ஆத்மீக ஞானிகள், அறிஞர்கள், முனிவர்கள் வாழ்ந்த பூமி இந்தியா.

உலகிற்குச் சமய நெறிகளைப் போதித்த பெருமை பாரதத்துக்கே உரியது.

அந்தப் புண்ணிய பூமியில் தான் ஏழ்மையும் உச்சக்கட்டத்தில் உள்ளது.

ஏழ்மையை நீக்க சமயம், அறிவு ஏன் பயன்படவில்லை?

வறுமைக் கோட்டின் கீழ் கோடிக்கணக்கான மக்கள் வாடுகின்றனர்.

அறிவு, ஆற்றல் இருந்தும் ஏன் இந்த நிலைமை நீடிக்க வேண்டும் - என்ற ஆதங்கம் பிரதமர் ராஜீவ் காந்தியின் உள்ளத்தில் நிறைந்துள்ளது.

அவரின் பேச்சுக்களில் இது தெரிகின்றது. வறுமை ஒழிய வேண்டும்; மக்கள் வளமான வாழ்வு வாழ வேண்டும்.

இது இளம் பிரதமரின் இலட்சியம். இதனை அடையத் தடையாக இருப்பது ஊழல் நடவடிக்கைகள் தான்.

இவற்றைக் களைந்தெறிய சங்கற்பம் பூண்டுள்ளார் திரு. காந்தி.

காங்கிரஸ் நூற்றாண்டு மாநாடு பம்பாயில் அண்மையில் நடந்தது அதில் பேசுகையில் ஊழல் நடவடிக்கைகளினால் தான் நாடு முன்னேற முடியாமல் உள்ளது என்பதைக் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

விஞ்ஞான வளர்ச்சியில் 20 ஆம் நூற்றாண்டைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது இந்தியா.

இதற்கான வழிவகைகளைக் கையாண்டு மக்களைத் தயார்படுத்துவதில் இந்திய அரசு பிரதமர் தலைமையில் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சர்வதேச அரசியலிலும் இந்தியாவின் பங்கு அதிகரித்துள்ளது. மூன்றாம் உலக நாடுகளின் கருத்துக்களை வெளியிடுவதில் இந்தியா முன்னணி வகிக்கின்றது.

அணிசேரா நாடுகளின் தலைமைப்பதவியை வகிக்கும் இந்தியாவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் உலக வல்லரசுகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்கின்றன.

அண்டை நாடுகளுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வதிலும் இந்தியா ஈடுபாடு காட்டி வருகின்றது.

ஆனால் அண்டை நாடுகள் 'தொல்லை' தரும் நாடுகளாக மாறிவிடக் கூடாதே என்ற கவலையும் இந்தியாவுக்கு உண்டு.

உலகில் ஒடுக்கப்படுபவர்களுக்கு எதிராக இந்தியா குரல் கொடுத்து வருகிறது.

நசுக்கப்படும் மக்களின் நல்வாழ்வு குறித்து இந்தியா எடுத்துவரும் நடவடிக்கைகள் பல.

தென் ஆபிரிக்காவில் கறுப்பு இன விடுதலைப் போராளிகள் நடத்தும் வீரப் போராட்டத்திற்கு இந்தியாவின் 'நலலாசியும்' உண்டு.

பலஸ்தீன மக்கள் ஒரு நாட்டை அமைத்துக் கொள்ள நடத்தும் போராட்டமும் இந்தியாவின் ஆதரவைப் பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழினமும் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ வேண்டும் என்று இந்தியா அல்லும்பகலும் உழைத்து வருவதை அனைவருமே அறிவர்.

இந்தியாவின் 'வலிமை'யிலேதான் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்வே தங்கியுள்ளது.

இந்தியாவின் சுதந்திரத்தில் தான் அண்டை நாடுகளின் மக்கள் சுதந்திரமாக வாழ்வதும் தங்கியுள்ளது.

## கூட்டணியினர் கொண்டு வந்த "கள்ளத்தோணி"களுக்கும் குடியுரிமையா?

### சிறில் மத்தியூ கேட்கிறார்

கொழும்பு, ஜன. 26

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வள்ளங்களில் கொண்டு வந்து சேர்த்த கள்ளத் தோணிகளுக்கும் சேர்த்தா இலங்கைக் குடியுரிமை வழங்கப் போகின்றீர்கள்?

இப்படி களனித் தொகுதி ஐ. தே. க. எம். பி திரு. சிறில் மத்தியூ நாடாளுமன்றத்தில் கேட்டார்.

அவசரகாலத்தை நீடிக்கும் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் திரு. சிறில் மத்தியூ நாடாளுமன்றத்தில் பேசினார்.

அச்சமயமே இக்கேள்வியைக் கேட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாடற்றவருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க அரசு தீர்மானித்தது கண்டனத்துக்கு உரியது.

குடியுரிமை பெறப் போகும் நாடற்றவர்களில் எத்தனை பேர் கள்ளத்தோணிகள்?

எத்தனை பேர் தலைமன்னார்வரை போய்த் திரும்பி வந்தவர்கள்?

எத்தனை பேர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் வள்ளங்களில் கொண்டுவரப்பட்டவர்கள்?

இப்படி திரு. மத்தியூ கேட்டார்.

அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி (சுதந்திரக் கட்சி) பேசுகையில்;

நாடற்றவருக்குக் குடியுரிமை வழங்க இலங்கை அரசு உடன்பட்டது [illegible] எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்த உடன்படிக்கை அமுல் நடத்தப்பட்டால் நாட்டில் பயங்கர நிலைமை ஏற்படும். பாரதூரமான விளைவுகள் உருவாகும் — என்று எச்சரித்தார்.

மதவாச்சி எம்.பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில்,

நாடற்றவருக்குக் குடியுரிமை வழங்குவதற்கு சிங்கள மக்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

சிங்கள மக்களின் நலனை உதாசீனம் செய்து எந்த அலுவலையும் செய்யமுடியாது.

நாட்டின் எதிர்காலத்தையும் சிங்கள மக்களின் [illegible] செயல் பாதிக்கப்போ[illegible] என்று [illegible]னார்.

## பருத்தித்துறை, கரவெட்டி பகுதிகளில் பேரணி

பருத்தித்துறை, ஜன. 26

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை ரத்துச் செய்யக் கோரி பருத்தித்துறை, கரவெட்டிப் பகுதிகளில் வியாழக்கிழமை முற்பகல் நீண்ட பேரணி (ஊர்வலம்) நடத்தப்பட்டது.

ஈழவர் முன்னணியினால் நடத்தப்பட்ட இப்பேரணி கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் உள்ள அல்வாய் மாலி சந்தியிலிருந்து ஆரம்பமாகியது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துடன் பேரணி முடிவடைந்தது.

மாணவ, மாணவிகள் பெருமளவில் கலந்து கொண்ட இப்பேரணி அல்வாய் மாலி சந்தியிலிருந்து நெல்லியடி, கரவெட்டி அரசடிச் சந்தி, கலிகைச் சந்தி, துன்னாலை, மந்திகை, கிராமக்கோடு ஊடாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

சுமார் ஆறுமைல் தூரப் பாதையில் நடைபெற்ற இப்பேரணியில் "ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை ரத்துச்செய்" "உடைமைகளைச் சூறையாடாதே" "இஸ்லாமிய சகோதரர்களை வாழவிடு" "அந்நிய கூலிப்படைகளை வெளியேற்று" "ஸ்ரீலங்கா அரசே ஈழவர்களை வாழவிடு" ஆகிய சுலோக அட்டைகள் கொண்டு செல்லப்பட்டன.

ஆறுமைல் தூரத்தை சுமார் 3 மணி நேரத்தில் சென்றடைந்த இப்பேரணியினர் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலுமிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மகஜரை யாழ் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிப்பதாக பேரணியினருக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலும் உறுதி அளித்தார்.

### பௌத்த பர்ணசாலையில் கஞ்சா!

கொழும்பு, ஜன. 26

பௌத்த பிக்குகள் தங்கும் பர்ணசாலை ஒன்றில் மருதானைப் பொலீஸார் 10,000 கிறாம் கஞ்சாவைக் கைப்பற்றினர்.

இந்தப் பர்ணசாலையில் இருந்து லொறி ஒன்றில் கஞ்சா மூடைகள் ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து, பொலீஸார் பர்ணசாலையைச் சோதனை இட்டனர்.

அச்சமயமே கஞ்சா அகற்றப்பட்டது. பொலீஸார் இது குறித்து இளம் பௌத்த பிக்கு ஒருவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

### பிரார்த்தனையும் பஜனையும்

யாழ்ப்பாணம், ஜன. 26

பருத்தித்துறை பிரஜைகள் குழுவினால் தைத்திருநாளன்று புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதிப்பிரார்த்தனையும் பஜனையும் இன்று தைப்பூசத் திருநாளன்று நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

TOEFL
Date of Exam: 8-3-86
Course begins on: 11-1-86
Course Fees: Rs. 250
Lecturer: Mr. KANDIAH NAVERENDRAN
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# உதயன்

26 01-1986

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
WEEKEND-COURSE (6 Months)
BASIC LANGUAGE
ஆரம்பம்: 25-1-86
கட்டணம், ரூ. 1500|-
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத PRACTICALS
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# 6 ஆவது திருத்தச்சட்டம் அரசு நீக்க ஆலோசனை

கொழும்பு, ஜன 26

நாட்டுப் பிரிவினையை எதிர்த்து அரசமைப்புச் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவிக்க வற்புறுத்தும் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கி விடுவது பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

சட்டத்திருத்தத்தை நீக்குவதன் மூலம் மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்களை நாடாளுமன்றத்துக்கு வரச்செய்யக் கூடியதான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கூட்டணி எம்பிக்களை நாடாளுமன்ற அரசியலில் மீண்டும் கலந்து கொள்ள வைப்பதன் மூலம் அவர்கள் தற்பொழுது கொண்டுள்ள 'அழுங்குப் பிடி'யை தளர்த்த வைக்க வேண்டும் இந்த நோக்கத்துடன் தான் அரசு, ஆறாவது திருத்தச் சட்டத்தைக் கைவிடுவது பற்றித் தீவிரமாகப் பரிசிலனை செய்கின்றது.

மாற்று யோசனைக்குத் தரும்பதிலைப்பொறுத்தே பேச்சுக்கள் நடக்கும் என்று கூட்டணி சென்னையில் இருந்து அறிக்கை மேல் அறிக்கை விட்டுக் கொண்டு இருக்கின்றது.

இதனிடையில் அரசு நியமித்த உயர்மட்டக் குழு, கூட்டணியின் மாற்று யோசனைகளைத் தீவிரமாகப் பரிசிலனை செய்து வருகிறது.

இரண்டு வாரங்களுக்கு இடையில் இதசம்பந்தமாக அறிக்கை ஒன்றை அரசிடம் உயர்மட்டக் குழு சமர்ப்பிக்கும் என்று தெரிகிறது.

அது பின்னர் இந்திய நூசரகம் மூலம் புதுடில்லிக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிகிறது.

பிரதமர் ராஜீவ்காந்தி பெப்ரவரி 1 ஆம் வாரத்தில் மாலைதீவு விஜயம் செய்கிறார். அவருடன் கூட வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியும் செல்கிறார்.

மாலைதீவில் இருந்து திரும்பி வந்தபின்னர் தான் திரு. பண்டாரி இலங்கைக்கு விஜயம் செய்பலாம் என்றுசொல்லப்படுகின்றது.

மாற்று யோசனைக்கு இலங்கை அளிக்கும் பதிலின் தன்மையைப் பொறுத்தே திரு. பண்டாரி வருகைக்கான திகதி நிர்ணயிக்கப்படலாம் என்று தெரிகிறது.

## ஜெயலலிதா பெயரிலுள்ள மன்றங்களை கலைக்க எம்.ஜி.ஆர். உத்தரவு

சென்னை, ஜன. 25

நடிகை ஜெயலலிதாவின் பெயரில உள்ள நற்பணி மன்றங்கள் எல்லாம் உடனே கலைக்கப்படவேண்டும்.

அப்படிக் கலைக்காத அ.தி.மு.க பிரமுகர்கள் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுகும்.

இப்படி தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

எம். ஜி. ஆர் —ஜெயலலிதா லடாய் மீண்டும் அ. தி. மு. காவில் தோன்றி விட்டதை இது ஊர்ஜிதம் செய்கிறது என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழ் நாடு முதலமைச்சர், நேற்று முன்தினம் மந்திரி அமைச்சர்கள் மூவருக்கு தன்னிடமிருந்த பல அமைச்சுக்களை பகிர்ந்து அளித்தார்.



ஜெயலலிதாவின் அரசியல் வைரியான திரு. ஆர் எம். வீரப்பனிடம் இருந்து எடுத்த மக்கள் தொடர்பு, செய்தித் துறை இரண்டையும் மீண்டும் திரு. வீரப்பனுக்கே திரு. எம். ஜி. ஆர். வழங்கிவிட்டார்.

ஜெயலலிதா — வீரப்பன் மோதல் உச்சக்கட்டத்தில் இருந்த சமயத்தில் தான் வீரப்பனிடம் இருந்த இந்த இரண்டு அமைச்சுக்களையும் எம். ஜி ஆர். பறித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அ. தி. மு. க. ராஜ்ய சபா எம். பி. யாக இருந்து கொண்டே ஜெயலலிதா, இந்திரா காங்கிரஸுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வந்தார் என அ. தி. மு. க. வட்டாரங்களில் புகார்கள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேலணையில் சிறுவன் பலி

நல்லூர், ஜன 26

நேற்று வேலணையில் இடம்பெற்ற சைக்கிள்— மினி ஸ் மோதலில் சிறுவன் ஒருவன்பலியானான். ஒருவர் காயமடைந்தார்.

மரணமானவர் பாலச்சந்திரன் அரிச்சந்திரன் (11 வயது) காயமடைந்தவர் (13 வயது) கிருஷ்ணபிள்ளை நகுலேஸ்வரன்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இவர்கள் இருவரும் மினிபஸ்ஸால் மோதுண்டனர்.

இவர்கள் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள்.

மானிப்பாய்

## இந்துக் கல்லூரி மாணவனுக்கு 2 வாரச் சிறை

கொழும்பு, ஜன. 26

தீவிரவாதிகள் பற்றித் தெரிந்து இருந்தும் தகவல் கொடுக்க மறுத்து விட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த செல்வராஜா ஈஸ்வரன் என்பவருக்கு 2 வார சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஸ்ரீதரன் மாஸ்டர், சத்தியமூர்த்தி, சிவபாலன் குமார் ஆகிய தீவிரவாதிகள் பற்றித் தெரிந்து இருந்தும் தகவல் கொடுக்கத் தவறியதாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவனை இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

22 மாதங்கள் இவர் தடுப்புக் காவலில் இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

## தந்திரிமலை தாக்குதல் குறித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன, 26

மன்னுருக்கும் மதவாச்சிக்கும் இடையில் உள்ள தந்திரிமலையில் ஈ. பி. ஆர் எல். எவ் வின் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப் படை நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவப் பொறுப்பதிகாரி உட்பட ஏழு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

சென்னையில் உள்ள ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி நடந்த இத் தாக்குதலில் டிரக் ஒன்று தகர்க்கப்பட்டதாகவும் இராணுவ வசதினர் முகாமை நோக்கிப் பின் வாங்கினர் என்றும் மக்கள் விடுதலைப் படை சாரபில் சேதம் எதுவும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நான பிள்ளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னேன்.

அப்பொழுது ஹெலிக்கொப்டர் ஒன்று வானத்தில் சுற்றும் சத்தம் கேட்டது.

வெளியில் வந்து பார்த்த பொழுது ஹெலிக்கொப்டரில் இருந்தும் தரையில் இருந்தும் நெருப்புபோல் குண்டுகள் சீறிப் பாய்ந்தன.

எமது வீட்டு முற்றத்திலும் குண்டுகள் விழத் தொடங்கின.

நான் பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு பாஷையூர் அந்தோனியார் கோயிலை நோக்கி ஓடினேன்.

அப்பொழுதும் ஹெலிக்கொப்டர் கடற்கரைப் பக்கமாக தாழப் பறந்து சுட்டுக்கொண்டேயிருந்தது.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, சேலையை தலையில் போட்டுக்கொண்டு ஓடினேன்.

இப்படி அவர் கூறினார்.

## ஜெயபுரத்தில் சிவதீட்சை

கிளிநொச்சி, ஜன 26

கிளிநொச்சி, ஜெயபுரம் அகதிகள் குடியேற்றத்திட்டத்தில் உள்ள இந்துக்களுக்குச் சிவதீட்சை வழங்கும் வைபவம் இன்று நடைபெறுகிறது.

தைப்பூசத் திருநாளாகிய இன்று யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜெயபுரத்திற்கு வருகை தந்து சிவதீட்சை வழங்குவதுடன் இங்கு அமைய இருக்கும் சித்தி விநாயகர் ஆலயத்துக்கும் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் மருத்துவ மனைக்கும் அடிக்கல் நடுவார்.

## கொட்டியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பதினொரு பேரில் முத்தையா தர்மலிங்கமும் ஒருவர்.

அவர் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் வியாபாரம் செய்து வருகிறேன். நீர்கொழும்பில் எனது தமையனார் வசிக்கிறார். அவரிடம் சென்று பணம் பெறுவதற்காக நீர் கொழும்பு செல்ல கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ரயிலுக்குக் காத்திருந்தேன்.

அப்பொழுது வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. சிறிது நேரத்தில் சீருடையினர் சிலர் ரயில்வே மேடைக்கு வந்தனர்.

அவர்கள் சுட ஆரம்பித்தபோது சுடவேண்டாம் என்று மன்றாடினேன். அவர்கள் சுடு விட்டுச் கொட்டியா சுட்டதாகச் சொல்லுங்கள் என்று கூறினர்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டேன்.

இப்படி அவர் கூறினார்.

## மத்திய கல்லூரி, வேம்படி இடமாற்ற யோசனைக்கு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம் காரணமாக யாழ்.மத்திய கல்லூரியை வேறிடத்துக்கு மாற்றும் யோசனை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

பாதுகாப்பு வலயம் தொடர்பாக யாழ் பிரஜைகள் குழு—வை. எம். சி. ஏ. மண்டபத்தில் விசேஷ கூட்டம் ஒன்றை நடத்தியது.

யாழ் மத்திய கல்லூரி உபஅதிபர் திரு. எஸ். இராசரத்தினம் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பிரஜைகள் குழு உபதலைவர் திரு.பி.அரியநயகம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. இராசரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:-

யாழ்.மத்திய கல்லூரி நூற்றி ஐம்பது வருடம் பழமை வாய்ந்தது. இந்தப் பாதுகாப்பு வலயப் பீதி காரணமாகப் பாடசாலையை மாற்ற நாம் விரும்பவில்லை. இவ்வாறு நாம் ஒதுங்கிக்கொண்டே சென்றால், எமது நிலை என்ன?

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாதுகாப்பு பனை முகாம்களையும் சுற்றி ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயம் போடப்பட்டால் குடா நாட்டில் மிஞ்சுவது ஐந்து மைல் எல்லைதான்.

யாழ்ப்பாண மக்கள் ஐந்து மைலுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டி வரும் —

இவ்வாறு திரு. இராசரத்தினம் எச்சரித்தார்.

வேம்படி மகளிர் கல்லூரி உபஅதிபர் திருமதி இ பாலசுந்தரமும் பாடசாலையை வேறிடத்துக்கு மாற்றுவதை எதிர்த்தார்.

வேறிடத்தில் இவ்வாறு வகுப்பறை, மண்டபம், தளபாடம், விடுதி வசதிகளைப் பெற முடியாது என்றார் அவர்.

முஸ்லிம்களின் குடியிருப்பு தொழிலிடங்கள், வணக்கஸ்தலம் ஆகியன இப்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும். இதனால் முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள் இதனால் பட்டினிச் சாவு அவர்களுக்கு ஏற்படும்.

இவ்வாறு ஜனாப். எம். எஸ். ஏ. ரகீம் குறிப்பிட்டார்.

வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக் குழு தலைவர் திரு. எஸ் விஜயானந்தன் பேசுகையில், அன்னையர் முன்னணியினர் பாதுகாப்பு வலயத்தைக் கண்டித்து நடத்தும் மறியல் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறினார்.

பாதுகாப்பு வலயம் காரணமாக பரந்தன் சாவகச்சேரி இரண்டும் தவிர்ந்த வடபிரதேச மக்கள் வங்கிக் கிளைகள் இயங்க முடியாத நிலை ஏற்படும்.

யாழ். நகரைப் பொறுத்த அளவில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன்நாஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகியனவும் இவ்வலயத்தினுள் அடங்குகின்றன.

— இவ்வாறு மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளர் திரு. ம. க. கணேசசுந்தரம் குறிப்பிட்டார்.

''ரயில் நிலையத்தைப் பொறுத்த அளவில் நாம் அதனை வேறிடத்துக்கு மாற்ற முடியாது. யாழ். மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களிலிருந்தும் மக்கள் இங்கு வந்தேயாக வேண்டும். இந்நிலையில் இத்திட்டத்தைக் கைவிடக் கோருவதைவிட வேறு வழியில்லை.'' இவ்வாறு யாழ்.ரயில் நிலைய அதிபர் திரு. எஸ். இராஜா கூறினார்.

''பாதுகாப்பு வலயம் தொடர்பாக அலுவலகங்களையும் கல்லூரிகளையும் வேறிடத்துக்கு மாற்றும் யோசனை ஏற்கக்கூடியதல்ல.

தலையணையை மாற்றினால் தலையிடி மாறும் என்ற கதை போலிருக்கிறது இது.''— இவ்வாறு மருத்துவக் கலாநிதி ஜெகாபசுபதி தனது பேச்சில் கூறினார்.

## யாழ் கிரிக்கெட் ஒருநாள் ஆட்டம் பாடசாலை சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ் மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் இந்த வருடம் ஒரு நாள் ஆட்டங்களாகவே நடைபெறும்.

வழமைபோல் இரண்டு நாள் ஆட்டங்கள் நடைபெற மாட்டாது.

அண்மையில் கூடிய யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் இப்படி இறுதி முடிவு எடுத்திருக்கிறது.

முன்னர் எதிர்பார்த்தபடி இந்த வருட ஆட்டங்கள் சுற்றுப் போட்டியாக நடத்தப்பட மாட்டாது எனவே வழமைபோல சிநேகபூர்வ ஆட்டங்களாகவே அவை இருக்கும்.

ஒரு நாள் ஆட்டங்களை 40 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளாக நடத்தலாம் என கூட்டத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த விடயத்தில் போட்டியில் மோதும் பாடசாலைகள் தமக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு ஆட்டத்தின் அமைப்பை மாற்றிக் கொள்ளலாம் என்றும் கூட்டத்தில் முடிவாகியது.

கூட்டத்திற்கு சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. எஸ். குணசீலன் தலைமை வகித்தார்.

இதேவேளை சில முன்னணிப் பாடசாலைகள் தமது பாடசாலைச் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டு இந்த வருடம் கிரிக்கெட் அணிகளை உருவாக்குவதில்லை என்றும்—

கிரிக்கெட் ஆட்டங்களில் இந்த வருடம் கலந்து கொள்வது இல்லை என்றும் முடிவு செய்திருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

## காயங்களுட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்ட பதினொரு பேர் விவரம் வருமாறு :-

1. நல்லையா கமலதாஸ் வயது 5 திருநகரைச் சேர்ந்தவர். வலது கையில் சூடு.

2. கிட்ணர் ராமசாமி வயது 32. உடையார்கட்டு சுதந்திரபுரத்தைச் சேர்ந்தவர். இடது காலிலும் உடம்பிலும் சூடு.

3. முத்துசாமி செல்லம்மா வயது 65. திருநகரைச் சேர்ந்தவர். இந்திய வம்சாவளி.

4. பெரிய கறுப்பன் சோமையன் வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியைச் சேர்ந்தவர். 58 வயது. வலது மூட்டில் சூடு.

5. அருணசலம் ஆறுமுகம். 55 வயது பரவைப் பாஞ்சான் 4 ஆம் வாய்க்காலைச் சேர்ந்தவர். கால், கையில் சூடு.

6. கந்தையா மனோன்மணி 12 வயது திருநகரைச் சேர்ந்தவர்.

7. துரைசாமி புவனேஸ்வரி 10 வயது திருநகரைச் சேர்ந்தவர். காலில் சூடு. பெற்றோரை வழி அனுப்ப வந்த இடத்தில் சமபவம்.

8. முத்தையா தர்மலிங்கம் வயது 29. சுதந்திரபுரம் வாசி.

9. தங்கராஜா ரூபகாந்தன், வயது 15 திருநகரைச் சேர்நதவர். இடது காலில் சூடு.

10. சின்னையா நல்லையா, அக்கராயனைச் சேர்ந்தவர். வயது 38. காலிலும் கையிலும் சூடு.

11. நாகேஸ்வரி. வயது 30.

## கிளிநொச்சியில் 2 பெண்கள்உட்பட அறுவர் கைது

கிளிநொச்சி, ஜன. 26

நேற்று அதிகாலை நான்கு மணி அளவில் கவசவாகனங்கள் சகிதம் கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் தேடுதல் நடத்திய இராணுவம் இரு பெண்கள் உட்பட ஆறுபேரைக் கைது செய்தது. பின்னர் ஒரு பெண் விடுதலை செய்யப்பட்டார்.

சின்னையா கமலா (வயது 15). நா. தர்மராசா (வயது 25). மு. முருகதாஸ் (வயது 20). மு. கரியதாஸ் (வயது22) பி. பாலகிருஷ்ணன் (வயது 28). ஆகியோரே இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட ஐவரும் ஆவர்.

கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்து தருமாறு கோரிக் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோரும் உறவினர்களும் கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவுக்கு நேற்றுக்காலை முறைப்பாடு செய்தனர்.

## கிளிநொச்சி ரயில்.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நாலா பக்கமும் சிதறிச் சீறின. அவற்றுக்கு ஆறு பேர் இரையாகினர்.

இரண்டு சம்பவங்களிலும் காயமடைந்தோர் எண்ணிக்கை 16 என அறிய வந்தது. மேலும் பலர் காயமுற்றிருக்கலாம் எனவும் அஞ்சப்பட்டது.

ரயில் நிலையத்தில் இறந்த எட்டு ஆண்களின் சடலங்களும் 3 பெண்களின் சடலங்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்ப்பிக்கப்பட்டன.

காயமடைந்த 16 பேரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் அவர்களில் 11 பேர் பின்னர் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தில்
இன மத பேதமின்றி நாட்டில்
சமாதானம் நிலைக்க
பிரார்த்திப்போமாக!
ஜோ. எகட்டன்
(செனித்)
யாழ்நகர்
உன்னைப் போல் உன் பிறத்தியானையும்
நேசிப்பாயாக. "யேசு"

## வித்தாரம்

முரளிக் தம்பியாரே! வாரும்! எங்காலை இந்தப் பக்கமா வாறீர்!

ஓ உமக்கு இண்டைக்கு என்னைக் கண்டதும் பெரிய புதுமையா இருக்கும் போலை, ஞாயிற்றுக்கிழமை வீட்டிலை நிக்கிற நாள். சந்திக்க முடியாது எண்டு சொல்லுறவர் இண்டைக்கு என்ன இந்தப் பக்கம் வாறார் எண்டு நினைக்கிறீரோ? அல்லது விஷயம் விளங்கிப் போச்சோ?

உனக்குக் கற்பூர மூளை தான் போ. சஞ்சீவி வரத்தொடங்கியிட்டுது எல்லே. அதிலை இனிச் சனிக்கிழமையளிலைதான் ஓய்வு தந்திருக்கினம். வீட்டிலை நிண்டா உன்னைச் சந்திக்கிறது கஷ்டம். அதுதான் ஒருக்காப் பார்த்துக் கதைச்சு நாலு செய்தியளைத் தெரிஞ்சு கொண்டு போவோம் எண்டு வந்தேன்.

நீ சொல்லுற தெல்லிப்பளை, சுன்னாகம், நாவற்குழி எல்லாம் தெரிஞ்ச விஷயங்கள் தானே.

அதுகளைச் சொல்லத்தான் எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகுது.

எங்கடை சனம் ஒருக்காச் சூடு கேட்டா உடனே ஓடுதுகள், ஒளிக்குதுகள், ஆனா அந்த நிமிஷம் பார்த் ரோட்டுகளிலை கூடி நிண்டு புதினம் பாக்குதுகள்.

அண்டைக்கும் பொங்கலுக்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து 'மோட்டோர்ஷெல்' விழுந்து சனசனம் செத்ததெல்லே.

வெடிச் சத்தம் நிண்ட கொஞ்ச நேரத்திலை நாலும் நண்பநும் அவசரமா ஓட்டுமடபோக வேண்டி இருந்ததாலை நாவலர் ரோட்டாலை போனேம்.

ரோட்டு நீளத்துக்கு நிண்ட சனக் கூட்டத்தைப் பாக்கேலாது. நாலு அடிக்கு ஒருக்கா நாப்பது பேர் எண்டு சொல்லுற அளவுக்குச் சனம் கூடிக்கூடி நிண்டு கதைக்குதுகள். தற்செயலாத் திரும்பவும் குண்டு அடிக்கத் தொடங்கி— ரோட்டிலை விழுந்தா வீணாச் சாகிறது தானே.

வீட்டுக்குள்ளை இருக்கையிக்கை குண்டு வந்து விழுந்து சாகிறது வேறை அல்லது அவசர அலுவலாய் ஒரு இடத்துக்குப் போகையிக்கை திடீரென குண்டு விழுந்திட்டுது எண்டா உண்மையிலை ஒண்டும் செய்ய ஏலாது தான் ஆனா ஆபத்து வரும் எண்டு தெரிஞ்சு கொண்டும் விடுப்புப் பாக்கப் போய் ஏன் வீணாச் சாக வேணும். அரசாங்கப் படைகள் தமிழனைச் சுட்டுத் தள்ளுறது போதாதெண்டு நாங்களா ஏன் சாவை தேடவேணும்.

சுன்னாகம் தெல்லிப்பளைப் பகுதியிலை விடுப்புப் பாக்க வெளியிலை போனவைக்குத் தானே ஆபத்து வந்தது.

ஆபத்தான நேரத்திலை தேவையில்லாமல் வெளியிலை வெளிக்கிடுறவையாலை பாதிக்கப்பட்டவைக்கு ஓடி ஆடித் தொண்டு செய்யிற எங்கடை பிள்ளையளுக்கும் வீண் கஷ்டமெல்லே.

இந்த விஷயம் எங்கடை சனத்துக்கு விளங்குதில்லை எங்களுக்கு உதவிற எங்கடை பிள்ளையளுக்கும் அதுகள் செய்யிற வேலையைச் செய்யவிடாமல் வீண் கரைச்சல். நாங்களும் வீணா ஆபத்தை விலைக்கு வாங்கிறோம்.

தொண்டோடி

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ்? — தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 1 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 26-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org